www.tamilarangam.net

# இலங்கைப் போராட்டம் இனி எந்தத் திசையில்?

கடந்த 32 மாதங்களாக இலங்கையை ஆக்கிரமித்திருந்த இந்திய கூலிப்படை, இலங்கை தமிழ் மக்களின் வீரஞ்செறிந்த எதிர்ப்பினாலும் விடுதலைப்புலிகளின்போராட்டத்தினாலும் இந்திய மக்களின் கண்டனத்தாலும் இலங்கை மண்ணை விட்டு விரட்டியடிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து இந்திய ஆக்கிரமிப்புப் படையின் கடைசி சிப்பாயும் வெளியேற்றப்பட்டு விட்ட நிலையில் இலங்கை மக்களின் ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போர் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

இந்திய ஆக்கிரமிப்புப் படையின் நிழலிலேயே குளிர்காய்ந்து வந்த வரதராசபெருமாள் - பத்மநாபா தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் கும்பலும் மற்ற உதிரி துரோகக் கும்பல்களும் இந்திய படை வெளியேறுவதற்கு முன்னரே உயிர் பிழைத்தால் போதும் என இந்தியாவுக்கு ஓடிவந்து விட்டனர். பொம்மை அரசான மாகாண சபை கலைந்து போய்விட்டது.

இப்போது வடகிழக்கு மாகாணம் முழுவதும் விடுதலைப்புலிகள் வசப்படுத்தி தங்கள் புலிக்கொடியை பறக்க விட்டுள்ளனர். வடகிழக்கு மாகாண நிர்வாக அமைப்புகளை புலிகள் அமைப்பு கையில் எடுத்துக் கொண்டுள்ளது.

இலங்கை அரசோ தென்னிலங்கையில் தனது எதிரிகளான ஜே.வி.பி இயக்கத்தினரை தற்காலிகமாக ஒடுக்கியுள்ளது. வட இலங்கையில் புலிகளுக்கு இலங்கை கட்டமைப்புக்குள் செயல்பட சிறிது அதிகாரங்கள் வழங்கிவிட்டு, புலிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு புலிகளின் மூலமாகவே மற்ற போராளி அமைப்புகளை ஒழித்துக் கட்டுவதில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது.

வடக்கில் புலிகள் ஜனநாயக விரோத முறையில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதில் முனைந்திருப்பதும், தெற்கில் பாசிச இனவெறி அரசின் கை ஓங்கியிருப்பதும் இலங்கை மக்களின் ஜனநாயக வாழ்க்கையைத் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றன. உரிமைக்காக எழுப்பப்படும் குரல்கள் மிருகத்தனமாக நசுக்கப்படுவதும், எதிர்ப்பு தெரிவிக்கும் எவரும் பிணமாக்கப்படுவதும் இன்றும் இலங்கையில் சர்வசாதாரணமாக நடக்கின்றன.

எண்பதுகளின் துவக்கத்தில் இலங்கை இனவெறி அரசுக்கு எதிராகத் தொடங்கிய இலங்கை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம், 87ல் தெற்காசிய பேட்டை ரவுடியான இந்திய அரசின் ஆக்கிரமிப்பு படைக்கு எதிரான போராட்டமாகத் தொடர்ந்தது. எண்ணற்ற உயிர்த்தியாகங்கள் செய்து இலங்கை மக்களின் வீரம்மிக்க எதிர்ப்பினால் இந்திய ராணுவமும் அதன் அடிவருடிகளும் இலங்கை மண்ணை விட்டே விரட்டப்பட்ட நிலையில் இலங்கையின் எதிர்காலம் குறித்த கேள்வி எழுந்துள்ளது. இவ்வேளையில் இலங்கை மக்களின் ஜனநாயகத்திற்கும் நல்வாழ்விற்குமான பாதை எது? என்பது இலங்கை மக்களின் நலனில் நாட்டம் கொண்டோரின் கேள்வியாகியுள்ளது. இக்கேள்விகளுக்கு பதில் காண ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரில் கிடைத்த அனுபவங்களைத் தொகுத்துக் கொள்வதும், இப்போது இலங்கையில் நடந்து வரும் சம்பவங்களையும் அவற்றின் பின்னணியையும் பரிசீலிப்பது அவசியம்:



### ஆக்கிரமிப்பாளர்களும், துரோகிகளின் கூட்டமும்

இலங்கையில் ஆக்கிரமிப்புப் படை பெற்ற படுதோல்வி. இந்திய மக்களின் எதிர்ப்பு. உலக நாடுகளிடையே தனிமைப்பட்டது ஆகிய காரணங்கள்தான் இந்திய ஆட்சியாளர்கள் படைகளை வாபஸ் பெறுவதற்கான காரணங்கள். ஆனால் அடிமேல் அடிவாங்கி மண்ணைக் கவ்வினாலும் இந்திய ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்புப் படைகள் இலங்கையில் ஏதோ 'சாதித்துவிட்டதாகவும்', 'தியாகம்' புரிந்ததாகவும் புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார்கள்.

ஆக்கிரமிப்புப் படைக்கு இலங்கையில் நடந்த வழியனுப்பு விழாவில் கூலிப்படை தளபதி கல்கத், "நாங்கள் கௌரவத்துடன் வந்தோம். போகும்போது அதே கௌரவத்துடன் செல்கிறோம். மிகவும் கடினமான பணியை கட்டுப்பாட்டுடனும். மனோதிடத்துடனும் செய்தோம்" என்று ஒரு எவரெஸ்ட் புளுகை அவிழ்த்து விட்டார்.

கேடயம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழியனுப்பு விழாவிற்கு இலங்கை மக்கள் யாருமே வராத நிலையில் குற்ற உணர்வோடும் மனச் சோர்வோடும் இருந்த கூலிப்படை சிப்பாய்களுக்கு எப்படியாவது உற்சாகமூட்டிவிட வேண்டும் என்று பொய்களையும், புளுகுகளையும் படைத்தளபதியும், அதிகாரிகளும் அவிழ்த்து விட்டனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. கூலிப்படை சிப்பாய்கள் அவர்கள் இலங்கையில் காலடி வைத்த போது வரவேற்கப்பட்ட விதத்தையும் இப்போது வழியனுப்பப்படுகின்ற விதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து மனம் புழுங்கினார்கள்.

1987ல் ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்திற்குள் அமைதிப்படை என்ற பெயரில் கூலிப்படை நுழைந்தபோது அதன் உண்மை சொரூபத்தை அறியாத தமிழ் மக்கள் மங்கள ஆரத்தி எடுத்து, மாலை சூட்டி அதனை வரவேற்றனர். இலங்கை அரசின் இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் இந்தியப் படை தங்கள் உற்ற நண்பனாகவும் உதவியாளனாகவும் செயல்படும் என்று தமிழ் மக்கள் உளமார நம்பினர். ஆனால் ஒரு சில நாட்களிலேயே ஆக்கிரமிப்புப் படை தனது கோரமுகத்தை வெளிக்காட்ட ஆரம்பித்தது. அமெரிக்க ஏகாதிபத்தியம் வியத்நாமில் நடத்திய அட்டூழியங்களை விடக் கொடூரமான அடக்குமுறையை தமிழ் மக்கள் மீது நடத்தியது. கொலைகள், கொள்ளைகள், பாலியல் பலாத்காரங்கள் போன்ற கொடூரங்களை இந்திய ஆக்கிரமிப்புப் படை நடத்தியது. யாழ்ப்பாண மருத்துவமனையின் மேல் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல், வல்வெட்டித் துறையில் நடத்தப்பட்ட கொலை வெறியாட்டங்கள் போன்றவை இலங்கைத் தமிழ் மக்களை ஆக்கிரமிப்பு படையின் மீது கடும் வெறுப்படையச் செய்தன, குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை ஆக்கிரமிப்பு இராணுவத்தை எதிர்த்துப் போராட ஆரம்பித்தனர். இப்படி மக்களிடமிருந்து தனிமைப்பட்ட ஆக்கிரமிப்புப் படைகள் இலங்கை தமிழ் மக்களின் தீரமிக்க எதிர்ப்பினால் அடித்து விரட்டப்பட்டன.

அரசு கணக்குப்படியே ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு தினசரி 3 கோடி ரூபாய் தண்டமாக செலவிடப்பட்டு வந்தது. விடுதலைப்புலிகளுடன் நடத்திய போரில் இந்திய கூலிப்படை 1,155 பேர்களை இழந்துள்ளது. 3000க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர். இப்பொழுது படுசேதங்களுடன் மூக்குடைந்து திரும்பியுள்ளது. இத்தனைக்கும் இந்திய உளவு நாய்களான 'ரா' கும்பல் 16 வருடங்கள் இலங்கையில் நிரந்தர ஆதிக்கத்திற்கு சதி வேலைகள் செய்தும் ஆக்கிரமிப்பு படைகளை நிறுத்தி வைக்கக் கூட முடியவில்லை.

அடுத்து ஜனநாயகப் பாதைக்கு தமிழ்ப் போராளிகளை திருப்பியதாக ஆக்கிரமிப்புப் படை தளபதிகள் கதைக்கிறார்கள். அதுஎன்ன ஜனநாயகப் பாதை? ஆக்கிரமிப்புப் படையின் அடிவருடிகளான ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப். மற்றும் பிற உதிரிகளைக் கொண்டு ஒரு போலித் தேர்தல் நடத்தி ஒரு பொம்மை அரசை நிறுவியதைத்தான் அப்படிக் கூறுகிறார்கள்.

ஆக்கிரமிப்புப்படையின் கைக்கூலிகளைக் கொண்ட பொம்மை அரசு ஆரம்ப காலம் முதற்கொண்டே மக்களிடம் கட்டாய வரி விதித்தல், கொள்ளையடித்தல், பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தல் என வெறியாட்டம் போட்டதால் ஈழ மக்களிடம்கடுமையாகதனிமைப்பட்டிருந்தது. ஆக்கிரமிப்பு ராணுவத்தின் விமானத்தில் வந்து வேட்பு மனுதாக்கல் செய்ததிலிருந்து நடமாடுவது முதற்கொண்டு ஆக்கிரமிப்பு ராணுவத்தின் தயவிலேயே அண்டி வாழ்ந்த துரோகக்கும்பல், கூலிப்படைகள் வெளியேறுவதற்கு முன்னரே தலைதப்பினால் போதும் என இந்தியாவுக்கு ஓடி வந்து விட்டது. கிளம்பும் போதுகூட இக்கும்பல் ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் இணைந்து இலங்கை கடைவீதிகளில் கொள்ளையடித்து விட்டே ஓடியது. இதுதான் ஆக்கிரமிப்பாளர்கள் இலங்கைப் போராளிகளுக்குக் காட்டிய ஜனநாயப் பாதை.

இலங்கையில் ஒற்றுமைக்காக பாடுபட்டதாகவும் இந்தகூலிப்படைதளபதிகள் அறிக்கை விடுகிறார்கள். கூலிப்படையினர்தான் தமது அடிவருடிகளான துரோகக் கும்பலைத் தூண்டிவிட்டு கடைசி நேரத்தில் 'தனி ஈழம்' பிரகடனம் வெளியிட்டனர் என்பதை அதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது.

ஆக்கிரமிப்பாளர்கள் முன் வைக்கும் 'சாதனைகள்' இப்படிப்பட்டவைதான். உலகிலேயே நான்காவது பெரிய வலிமை மிக்க ராணுவம் என்று சொல்லப்படும் இந்திய ராணுவம் தொட்டால் நொறுங்கி விழக்கூடிய ராணுவம்தான், கோழைப் பட்டாளம்தான் என்பதை இலங்கை மக்கள் தங்கள் தீரம்மிக்க போராட்டத்தின் மூலம் உலக மக்களுக்கு நிருபித்துள்ளனர்.

## விடுதலைப்புலிகளின் ஆதிக்க அரசியல்

ராணுவ பலமும், சர்வதேச வலைப்பின்னல் தொடர்புகளும் கொண்ட விடுதலைப்புலிகள் ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரில் தமது வலிமையைப் பெருக்கிக் கொண்டு இப்போது இலங்கை அரசியலில் ஓர் ஆதிக்க சக்தியாக உருவெடுத்துள்ளனர். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை உறுதியுடன் எதிர்கொண்டு அதனை விரட்டியடிப்பதில் முக்கியப் பங்காற்றிய விடுதலைப்புலிகளிடம் இலங்கைத் தமிழ் மக்கள் அனுதாபம் கொண்டிருந்தது இயல்பானதே. தமிழ் மக்களுடைய உளப்பூர்வமான ஆதரவும், உதவியும்தான் 32 மாதங்களாக இந்திய ராணுவத்துடன் நடந்த தொடர் யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தாக்குப்பிடித்து நிற்க முக்கிய காரணங்கள் ஆகும். ஆனால் விடுதலைப்புலிகள் தமது ஆக்கிரமிப்பு எதிர்ப்பு நடவடிக்கைகளில் மக்கள் மத்தியில் கிடைத்த செல்வாக்கை வைத்துக் கொண்டு தற்போது ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை தமிழ் மக்கள் மனக்கசப்புடனேயே கவனித்து வருகின்றனர்.

இந்திய ராணுவமோ படுதோல்வி, நிர்பந்தம் காரணமாக வெளியேறியது. துரோகிகளோ உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பி ஓடி விட்டார்கள். இச்சூழலில் இலங்கை அரசுடன் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு விடுதலைப்புலிகள் வட இலங்கை முழுவதையும் தமது இராணுவ ஆதிக்கத்தில் கீழ் எளிதாகக் கொண்டுவந்து விட்டனர். புலிகளின் அரசியல் கட்சியான மக்கள் முன்னணியின் அலுவலகத்தைத் திறந்து விட்டனர்.

வடகிழக்கு மாகாணம் முழுவதும் தமது கேள்வி கேட்பாரற்ற அதிகாரத்தை நிறுவுவதற்கு தடையாக உள்ள மற்ற இயக்கங்களின் அரசியல் செயல்பாடுகள் அனைத்தையும் விடுதலைப்புலிகள் தடைசெய்துள்ளனர். இதுவரை இப்படி 14 கட்சிகள் மற்றும் குழுக்களின் அரசியல் நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் தடை செய்துள்ளனர். இவ்வியக்கங்கள் பிரேமதாசாவுக்கு இது குறித்து புகார் மனு ஒன்றை கொடுத்துள்ளனர். பிரேமதாசாவும் இது குறித்து சடங்குக்கு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். உண்மையில் விடுதலைப்புலிகள் இலங்கை ராணுவத்துடன் இணைந்தே மற்ற அமைப்புகளை ஒழித்துக் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வடகிழக்கு மாகாணம் முழுவதும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பொழுது விடுதலைப்புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. இப்போது வடகிழக்கு மாகாண அரசு அலுவலகங்களிலும் வீடுகளிலும், ஆட்டோக்களிலும் மற்ற அனைத்து வாகனங்களிலும் புலிக்கொடிகள் வலுக்கட்டாயமாக பறக்கவிடப்பட்டுள்ளன. டீக்கடைகளில் பிரபாகரன் துதிபாடும் பாடல்களே கட்டாயப்படுத்தி போடப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் எங்கும் திட்டமிட்டு பிரபாகரன் துதி பரப்பப்படுகின்றது.

அதேபோல் தமிழகத்திலும் விடுதலைப்புலிகளின் பிரச்சார அணிகளாகவே நெடுமாறன், வீரமணி வகையறாக்கள் செயல்படுகின்றார்கள். பிரபாகரனை மண்டேலாவுடன் ஒப்பிட்டும் 'உலக தமிழன் தளபதி' என்றும் வானளாவ துதி பாடுகிறார்கள். தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள முதலாளித்துவ பத்திரிகைகள் தலைமறைவான உள்ள பிரபாகரன் 'இங்கே தோன்றுவார், அங்கே தோன்றுவார்' எனத் திட்டமிட்டு பிரபாகரனை கடவுளாக்கி செயற்கையான பரபரப்பை உண்டாக்கி வருகின்றன. இவையெல்லாம் வட கிழக்கில் விடுதலைப்புலிகள் செய்துவரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மூடி மறைப்பவையே.

விடுதலைப் புலிகள் எப்போதுமே தங்களது ஆதிக்கத்திற்கு தடையாக இருக்கும் யாரையும் அனுமதிப்பதில்லை. அதே வேளையில் தங்களின் ஆதிக்கத்திற்கு பயன்படும் பட்சத்தில் அவர்கள் யாருடனும் சமரசம் செய்து கொள்ளத் தயங்கியதும் கிடையாது. இதுதான் அவர்களின் இயக்கம் தோன்றியதிலிருந்தே கடைபிடிக்கும் கொள்கை. மற்றபடி அவர்களின் 'சோசலிச தமிழ் ஈழம்' போன்ற கொள்கையெல்லாம் அதிகாரத்தை கைப்பற்ற அவர்கள் பயன்படுத்தும் படிக்கட்டுகளே.

துவக்கத்தில் தங்களின் ஆதிக்கத்திற்கு



ஆக்கிரமிப்பு ராணுவத் தளபதிகளுடன் அவர்களின் வளர்ப்பு பிராணி வரதராச பெருமாள் மது அருந்தி மகிழ்கிறது

விடுதலைப் புலிகள் எப்போதுமே தங்களது ஆதிக்கத்திற்கு தடையாக இருக்கும் யாரையும் அனுமதிப்பதில்லை. அதே வேளையில் தங்களின் ஆதிக்கத்திற்கு பயன்படும் பட்சத்தில் அவர்கள் யாருடனும் சமரசம் செய்து கொள்ளத் தயங்கியதும் கிடையாது. இதுதான் அவர்களின் இயக்கம் தோன்றியதிலிருந்தே கடைபிடிக்கும் கொள்கை. மற்றபடி அவர்களின் 'சோசலிச தமிழ் ஈழம்' போன்ற கொள்கையெல்லாம் அதிகாரத்தை கைப்பற்ற அவர்கள் பயன்படுத்தும் படிக்கட்டுகளே.

தடையாக இருந்ததால் டெலோ சிறீசபாரத்தினம் உட்பட பல போராளிகளை கொன்று தீர்த்தார்கள். இலங்கை, இந்திய மக்களின் விரோதிகளான இந்தி ஆட்சியாளர்கள், தமிழக பிழைப்புவாத கழகங்களுடன் கூடி குலவித் திரிந்தார்கள். இந்திய உளவு நாய்களான 'ரா'வின் பகடைக்காய்களாக செயல்பட்டு அனுராதபுரத்தில் பல சிங்கள குடும்பங்களை கொன்றார்கள். பின்னர் ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் போடப்பட்ட போது ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தையும், ஆக்கிரமிப்பாளர்களையும் ஏற்றுக் கொண்டார்கள். 1987 ஆகஸ்டில் யாழ்பாணத்தில் உள்ளே நுழைந்த இந்திய இராணுவத்தின் டாங்குகளில் புலிக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன என்பது நினைவிருக்கலாம். தங்கள் அனுமதியுடன் யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்த ஆக்கிரமிப்புப் படை தமது ஆதிக்கத்திற்கு தடையாக மாறிய போதுதான் புலிகள் அதனுடன் மோதத் தொடங்கினர். பின்னர் ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகக் கூறினர். இப்போது ஆக்கிரமிப்பு இராணுவத்தை துரத்தியடித்ததில் கிடைத்த நல்ல பெயரை பயன்படுத்திக் கொண்டு ஒப்பந்தத்தின் மூலம் உருவாகிய அதே மாகாண கவுன்சிலின் நிர்வாக அமைப்புகள் மூலமே ஆட்சியை பிடித்துள்ளனர்.

தற்போது இலங்கை அரசியல் சாசனச் சட்டத்தின் 6வது பிரிவான - பிரிவினைவாத தடைச் சட்டத்தை ரத்து செய்யக்கோரி இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டுள்ளனர். இப்பிரிவினை தடைச்சட்டம் நீக்கப்பட்டவுடன் 'தாங்களே தேர்தலை' நடத்தி தாங்களே ஆட்சி அமைக்கப்போவதாக அறிவித்துள்ளனர். தங்களை மேலும் பலப்படுத்திக்கொள்ள விடுதலைப்புலிகள் மாகாண போலீஸ் படையை கட்டி வருகின்றனர். முன்பு துரோகிகள் தேசிய ராணுவத்தில் வலுக்கட்டாயமாக பள்ளிச் சிறுவர்களைச் சேர்த்தனர். இப்போது விடுதலைப் புலிகள் தேசிய ராணுவத்தைக் கலைத்துவிட்டு தங்களது மாகாண போலீசுக்கும் அதே போன்று வலுக்கட்டாயமாகவே ஆள்சேர்ப்பு செய்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் எத்தகைய ஜனநாயகவாதிகள் என்பதற்கு சாட்சியாக உள்ளது அவர்களின் கட்சித் தலைவர் மாத்தையாவின் சமீபத்திய அறிவிப்பு. 'விடுதலைப்புலிகள் மக்களை பாதுகாக்க ஆயுதம் வைத்திருப்பார்கள். மற்ற போராளி அமைப்புக்கள் ஆயுதங்களை புலிகளிடம் விரைவில் ஒப்படைக்காவிடில் அவர்கள் துரோகிகளாக பாவிக்கப்பட்டு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அப்பட்டமாக மிரட்டியுள்ளார் மாத்தையா.

இலங்கையின் வடகிழக்கில் மற்ற அமைப்புகளின் அரசியல் நடவடிக்கைகள் இவ்வாறு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், புலிகளின் கேள்வி கேட்பாரற்ற இராணுவ ஆதிக்க நடவடிக்கைகளினால் தமிழ் மக்களின் ஜனநாயக வாழ்வே அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

## இலங்கை அரசின் கபட நோக்கங்கள்

கடந்த 6 மாதங்களுக்கு முன்பாகவே இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஆக்கிரமிப்புப்படை வெளியேறும் பட்சத்தில் இலங்கை கட்டமைப்பிற்குள்ளேயே அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப் பேரம் பேசத்துவங்கினர். அப்போது ஆரம்பித்த அந்த 'புனித உறவு' ஆக்கிரமிப்புப்படை வெளியேறிய நிலையில் இப்போது உறுதியடைந்துள்ளது. இலங்கை இனவெறி பாசிச அரசின் கபட நோக்கங்களுக்கு புதிய கூட்டாளிகளாக விடுதலைப்புலிகள் கிடைத்துள்ளார்கள். ஆம், இலங்கை அரசைப் பொறுத்தவரை துவக்கத்திலிருந்தே ஆக்கிரமிப்பு ராணுவத்தை எதிர்ப்பது அதன் நோக்கமல்ல. இந்திய ஆக்கிரமிப்பாளர்களை ஏற்று அவர்கள் தயவில் தனது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வது என்பதே அதன் நோக்கமாகும். இலங்கை மக்களின் எதிர்ப்பு காரணமாகவே இந்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கும் நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டது. முக்கியமாக இலங்கை இனவெறி அரசு தனது அதிகாரத்தைதக்கவைத்துக்கொள்வ-தற்காகஎவ்வமைப்பையும்பயன்படுத்துவ-தற்கோ அல்லது அழிப்பதற்கோ தயங்கி-யது கிடையாது.

துவக்கத்தில் இலங்கை ராணுவத்திற்-கும் தமிழ் போராளிகளுக்கும் நடந்த யுத்தத்தில். இலங்கை தரப்பில் கடும் இழப்புகள் ஏற்பட்டதுடன் நாடு துண்டா-டப்படும் அபாயமும் இருந்தது. எனவே இந்திய ராணுவத்தின் மூலம் போராளி-களை பலவீனப்படுத்தியது. நாடு பிரிவதை தடுத்து நிறுத்தி தனது சுரண்டல் நலன்களை தக்கவைத்துக் கொண்டது. ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தை பெயரளவில் ஏற்றுக்கொண்-டதேயன்றி நிறைவேற்றவில்லை. நிறை-வேற்ற விரும்பவில்லை. ஏனெனில் நிறை-வேற்றும் பட்சத்தில் சிங்கள மதவாதிகள் எதிர்ப்பார்கள். அதனால் தனது அரசுக்கு நெருக்கடிகள் உண்டாகும் என்பதால்தான்.

இப்போது இலங்கை அரசு விடுத-லைப் புலிகளை தனது கைக்குள் போட்டுக்-கொண்டு. இலங்கை கட்டமைப்பிற்குள் சில அதிகாரங்களை கொடுத்துள்ளது. அது விடுதலைப்புலிகள் மூலமாகவே மற்ற இயக்கங்களை ஒழித்துக்கட்டி வருகிறது. தென்னிலங்கையிலும் அரசின் பயங்கர-வாத ரகசியப்படைகள் மூலமாக. ஜே.வி.பி. இளைஞர்களை நாள்தோறும் படுகொலை செய்து வருகிறது. அது ஏற்கனவே போடப்பட்டு அமலில் இருக்-கும் எமர்ஜென்சி சட்டம், கொடூரமான கருப்புச் சட்டங்கள் எதையும் நீக்கவில்லை. 'சந்தேகிக்கப்படும் யாரையும் சுட்டுக் கொன்றுவிட்டு இறந்தவரின் குடும்பத்திற்கு தெரிவிக்காமலேயே. பிணத்தைப் பிணப்ப-ரிசோதனை கூட செய்யாமல் புதைக்கவோ அல்லது எரிக்கவோ செய்யலாம்' என்று போலீசுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டம் உள்ளிட்ட பல காட்டுமிராண்டிச் சட்டங்கள் இன்னும் நீடிக்கின்றன.


இப்படி தனது அரசியல் எதிரிகளை ஈவிரக்கமின்றி படுகொலை செய்துவரும் இலங்கை அரசு, விடுதலைப்புலிகளுடன் இன்று உறவை வளர்த்துக் கொண்டிருப்ப-தும் தனது கபட நோக்கங்களுக்காகவே.

## இலங்கைப் போராட்டம் இனி எந்தத் திசையில்?

இலங்கை இராணுவம் 10 வருடங்க-ளாகச் செய்த அடக்குமுறைகளை விடப் பலமடங்கு கொடூரமான அட்டூழியங்களை 2 வருடங்களாகச் செய்த இந்திய இராணு-வம் இலங்கை மக்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. அமெரிக்க இராணு-வத்தை வியத்நாமிய மக்கள் விரட்டியது போல் தமது தீரம் மிக்க எதிர்ப்பின் மூலம் இந்திய இராணுவத்தை இலங்கை மக்கள் விரட்டியுள்ளனா

இந்திய ஆக்கிரமிப்பு. இராணுவம் முற்றிலும் விரட்டியடிக்கப்பட்டிருப்பது என்பது இலங்கை மக்களைப் பொறுத்த-வரை பெருமைப்படத்தக்க ஒரு வெற்றியா-கும். ஆனால் இலங்கை மக்களோ இந்த வெற்றியைக் கொண்டாடும் மன நிலையில் இன்று இல்லை. ஏனெனில் பேயை விரட்டிவிட்டு பூதம் வந்ததுபோல் தென்ப-குதியில் பிரேமதாச அரசின் அடக்குமுறை-களும், வடகிழக்கில் விடுதலைப் புலிக-ளின் ஜனநாயக விரோத நடவடிக்கைக-ளும், தொடருகின்றன. ஜனநாயகத்துக்-கான ஏக்கங்களையும், பெருமூச்சுக்களை-யும் கூடத் தடைசெய்யும் அளவுக்கு இவர்களின் அடக்குமுறைகள் பெருகியி-ருக்கின்றன.

இந்நிலையில் விடுதலைப் போராட்-டத்தில் நம்பிக்கையும், அக்கறையும் கொண்டிருந்த பல இளைஞர்கள் விரக்திய-





ஈழத்தின் புதிய ஆதிக்கவாதிகள்; பிரபாகரன், பாலசிங்கம், யோகி.

டைவதும், வெளிநாடுகளுக்கு பிழைப்புத் தேடிச் செல்வதுமான நிலை மீண்டும் இலங்கையில் தலைதூக்கியிருக்கிறது.

இலங்கை அரசின் அடக்குமுறைகள். இந்-திய ராணுவத்தின் அடக்குமுறைகள், கைக்-கூலிகளின் அடக்கு முறைகள், இப்பொ-ழுது புலிகளின் அடக்குமுறைகள் என்று வரிசையாக அடக்கு முறைகளை மட்டுமே சந்தித்துச் சோர்விற்றிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்குத் தற்போது நம்பிக்கை-யும், உதவியும் முன்னெப்போதையும் விடத் தேவைப்படுகிறது.

இதுவரை தமிழகத்தின் பிழைப்புவாத அரசியல்வாதிகளிடமும், இந்திய ஆட்சி-யாளர்களிடமும் இலங்கைத் தமிழ் மக்கள் கொண்டிருந்த பிரமைகள், கடந்த 2 வருட நிகழ்ச்சிகளால் முற்றாகத் தகர்ந்து போயி-ருக்கின்றன. இனவாத தலைமைகள் எல்-லாமே சுயநலக் கூட்டங்கள்தான் என்பதை தமிழ்மக்கள் நடைமுறையில் உணர்ந்துள்ள நிலையில் தமிழ் - சிங்கள இனப்பகைமை-யும் தகர்ந்துள்ளது. இத்தகைய நிலையில் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் நம்பிக்கை அளிக்கக்கூடியது புரட்சிகர அரசியல் மட்டுமே. இலங்கைப் புரட்சி என்ற உயர்ந்த இலட்சியத்தைக் கொண்டதாக. இலங்கையின் அனைத்து புரட்சிகர ஜனநாயக சக்திகளையும் ஈர்த்து இணைத்துச் செல்வதாக சுயநல அதிகாரத்-துவ சக்திகளைக் தூக்கி எறிவதாக அமை-வது புரட்சிகர அரசியல் மட்டுமே.

இன்றைய நிலைமையில் இலங்கை புரட்சிகர சக்திகள் முன் கை எடுத்துப் பணியாற்றும் தேவையும். கடுமையான நிலைமைகளுக்கு மத்தியிலும் தமிழ் - சிங்கள மக்களிடம் புரட்சிகர அரசியலை எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையும் முன்னெப்போதையும் விட அதிகரித்துள்-ளன. இந்தியப் புரட்சிகர சக்திகளும், சர்வதேசப் புரட்சிகர சக்திகளும் எல்லாவ-கையிலும் அவர்களுக்குத் துணைநின்று உதவ வேண்டும்.

● மூர்த்தி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எமது மக்களுக்கு அழிவைத் தருகின்ற புலிகளின் ராஜதந்திரம் அரசியல் சாணக்யமா? அல்லது வரலாற்றுத் துரோகமா?

தமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அரசியல் சாணக்யம் அல்லது இராஜதந்திரம் என்றும் இரத்த வெறி பிடித்த தனிமனித கொலைகளை துரோகிகளுக்கான தண்டனை எனவும் வர்ணித்து இறந்து போன அப்பாவித் தனமான அரசியல் அறிவு எதுவுமற்று நாட்டுக்காக என்ற தூய உணர்வுடன் தம்மை அர்பணிக்கும் இளைஞர்களின் கல்லறைகள் மீது அனுதாப அரசியல் நடாத்தும் புலிகளே! மற்றவர்களை துரோகிகள் என்று வர்ணிக்கும் ஒவ்வொரு தடவையும் உங்கள் முதுகுகளை நீங்கள் திரும்பிப் பாருங்கள்! எதிரியை மாற்றி மாற்றி ஆடும் உங்கள் இராணுவ வீர விளையாட்டுக்கு பெயர் அரசியல் சாணக்யம் என்றால் சாணக்யனின் உண்மையான வரலாறே உங்களுக்கு தெரியாது என்பதுதான் அர்த்தமாகும்.

சுதந்திரப் போராட்டத்தில் இழப்புக்கள் தவிர்க்க முடியாதவை. அதனால்தான் அதன் பெறுமானம் மிக உயர்ந்தது. அதற்காக இழப்புக்களே சுதந்திரப் போராட்டமானால் அல்லது ஆக்கப் பட்டால் அதற்குப் பெயர் சுதந்திரப் போராட்டமும் அல்ல. அந்த இழப்புக்கள் தியாகங்களும் அல்ல. அதற்குப் பெயர் பித்தலாட்டம் அல்லது பைத்தியக்காரத்தனம். உங்களுடைய நடவடிக்கைகள் முதலாவது தரத்தைச் சேர்ந்தவை ஆக முடியாது. ஏனெனில் அது மக்களின் விமோசனத்திற்காக நடத்தப் படுவது உங்களின் பதவி வெறிக்காக அல்ல. உங்கள் சிலரின் பதவி வெறிக்காக மற்றவர்களை கொன்று விட்டு துரோகிகள் எனவும், உங்கள் அமைப்பை சார்ந்தவர்கள் சிலரை சாகடிக்க வழி கோலிவிட்டு அவர்களை தியாகிகள் எனவும் ஆடும் நாடகம் மற்றவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் புரியாததல்ல. ஆனால் உங்கள் துப்பாக்கி சர்வதிகாரம் அவர்களை புரியாதவர்கள் போல நடிக்க வைத்திருக்கின்றது. இது உங்களுக்கும் புரியாதது அல்ல. அதனால்தான் எதிரியை பலவீனப்படுத்தவும் அம்பலப் படுத்தவும் பாவிக்க கூடிய தற்காலிக நடவடிக்கையான ஜனநாயக வழி என்ற தந்திரோபாய ரீதியிலான ஆயுதத்தைநீங்கள் கையாள ஒவ்வொரு முறையும் மறுத்தது மாத்திரமல்லாமல் உங்கள் துப்பாக்கித் தாரத்தனத்திற்கு அப்பாவி மக்களை பலிக்கடாவாக்கி பெண்களின் மீதான மானபங்கங்களை உங்கள் பிரச்சாரத்திற்கு அணிகலன்கள் ஆக்குகின்றீர்கள்

உங்களின் உண்மையான சுயரூபத்திற்கு இதோ சில ஆதாரங்கள்!
மக்களின் விடுதலையைப் பற்றி சிந்திக்காத நேரத்தில் விடுதலைக்காக தம்மை இணைத்துக் கொண்ட மைக்கல்,பற்குணம் முதல் உங்கள் பாதை பிழையானது என கண்டித்த காரணத்தினால் உமா மகேஸ்வரனை கொலை செய்ய உங்களால் ஏவப் பட்டு பின் உண்மை புரிந்த நிலையில் உங்களையே கண்டித்து தமிழீழ மக்கள் விடுதலைகழகத்தை ஆரம்பித்தற்காக சுந்தரம், வீடியோ டெக் களவாடினர் என குற்றம் சாட்டி டெலா ஒபரோய் தேவன்,தவறுதலாக உங்களால் கொலை செய்யப் பட்டதாக சொல்லப்பட்ட டெலி ஜெகன், டெலோ சிறிசபாரட்ணம்,தமிழீழ மக்கள் விடுதலைக் கழக ஆரம்ப உறுப்பினர்களான கண்ணன், வாசு, சுபால், ரவிமூர்த்தி, பண்டா, மெண்டிஸ் ஆகிய இயக்க உறுப்பினர்களையும்,தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களான

www.tamilarangam.net

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சாம் தம்பிமுத்து, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்க வாதியான விஜயானந்தன், நவசமாஜக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்க வாதியான அண்ணாமலை, போன்றவர்களையும் யாழ் அரசாங்க அதிபர் பஞ்சலிங்கம், யாழ்பரியோவன் கல்லூரி அதிபர் ஆனந்த ராஜா,பல்கலைக் கழக மருத்துவ பீட விரிவுரையாளர் ராஜினி திராணகம போன்ற கல்விமான்களையும் இன்று ஈ.பி.ஆர்.எல்.எப் கட்டுப்பாட்டு உறுப்பினர்களான பத்மநாபா, கிருபாகரன் மற்றும் யோகசங்கரி(பா.உ), தருமர், நிர்மலா, கவிதா, லிங்கன், ரமேஸ், புவிநாதன், கமலன், ரமணன், முகுந்தன் என உங்கள் கொலை வெறி நடவடிக்கைகளை விலாவாரியாக எழுதிக் கொண்ட போகலாம். ஈ.பி.ஆர்.எல்.எப்,டெலோ,புளொட்,டெலா இயக்கப் போராளிகள், தொழிற் சங்க வாதிகள், கூட்டணி ஆதரவாளர்கள், மாணவர்கள் என உங்களால் கொலை செய்யப் பட்டவர்ளுக்கு நீங்கள் சூட்டும் பெயர் "துரோகிகள்".

கடந்த காலங்களில் யூ.என்.பி அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்புத் தலைமைகளின் கீழ் அணிதிரண்டிருந்த கிழக்கு மாகாண முஸ்லீம் மக்கள் தங்களுக்கான ஒரு தலைமையை சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் என்கிற அமைப்பின் ஊடாக உருவாக்கியதை வரவேற்க வேண்டியதும் வளர்த்தெடுக்க வேண்டிய தேவையுமாகும். கடந்த சில மாதங்களாக யூ.என்.பி அரசின் கைக் கூலிகளாக செயல் பட்ட புலிகள் இத்தலைமையை பலவீனப் படுத்துவதிலும் செயல் படுத்துவதிலும் முக்கிய பங்காற்றியதும் அவ்வமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களை கொலை செய்ய முயன்றதும் துரோகமா? அல்லது சாணக்யமா?

மாற்றுக் கருத்து கொண்டவர்களை துரோகிகள் என வர்ணிக்கும் புலிகளே நீங்கள் கடந்த காலத்தில் செய்த நடவடிக்கைகளை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம். ஒரு காலத்தில் இந்தியாவின் ஏவல் நாய்களாக ஆயுதங்களுக்காக, அனுராத புரத்தில் நூற்றுக்கணக்கான அப்பாவிச் சிங்கள மக்களை கொலை செய்ததையும், எல்லைப் புற கிராமங்களில் உங்களால் கொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சிங்கள மக்களையும் மனிதாபிமானமுள்ள எந்த மனிதனும் மறந்து விட முடியாது. சிங்கள பகுதிகளில் உள்ள தமிழ் மக்களை அவர்களும் உங்கள் இந்த நடவடிக்கைகளுக்காக பழி வாங்க நினைத்திருந்தால்.... ஆனால் அவர்கள் உங்களை விட மனதாபிமான முள்ளவர்கள் என்பதை வரலாற்றில் நிரூபித்துள்ளார்கள். இவை உங்களுக்கு புரிய நியாயமில்லை.ஏனெனில் நீங்கள்தான் புலிகளாயிற்றே. உங்களுடன் பேசவேண்டிய பாசையே வேறு என்பது அவர்களுக்கு புரியாது போலும்.

எமது இயக்கங்களிடையே ஒற்றுமை தேவை என்பது பரவலாக எல்லோராலும் வலியுறுத்தப்பட்ட விடயமாகும். ஆனால் நீங்கள் இயக்கங்களிடையேயான ஒற்றுமை என்ற அர்த்தத்தையே மாசுபடுத்தும் நிலையில் ஈ.என்.எல்.எப்.(ENLF) கூட்டில் புகுந்து ஐக்கியம் என்ற பதத்திற்கே மாசு கற்பித்தீர்கள். இதற்கு மாமாவாக இருந்த பாலகுமார்(EROS) தனது இந்த துரோகத் தனத்தை மறைக்கவும் தான் உயிர் வாழவும் நீங்கள் மற்றவர்களையெல்லாம் அழித்ததை நியாயப் படுத்தும் வகையில் உங்களுடன் இணைந்து செயல் பட்டார். இதற்குப் பரிசாக அவருக்கு அண்மையில் பிரபாகரன் தனது

பத்திரிகையாளர்களுக்கு கொடுத்த பேட்டியில் இவர்கள் பச்சோந்திகள் என நாகரீகமாக மாமாக்கள்தான் என்பதை குறிப்பிட்டார். அதன் பின் இவர்களது நடவடிக்கைகள் இவர்கள் மாமாக்கள்தான் என்பதை புலிகளுக்காக ஆயுதம் வாங்க றோவிடம்(RAW) தூது போவதில் இருந்து நிரூபித்து விட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்று இந்தியா உங்களின் தனியான எதேச்சதிகாரத்தை ஏற்கமறுத்ததை நியாயப் படுத்தமுடியாமல் அவர்களுடன் மோதுவதற்காக உங்களின் முன்னணிப் போராளிகளுக்கு "சைனட்" கொடுத்து கொலை செய்வதற்கு நீங்கள் கற்பித்த நியாயம் அவர்களை இலங்கை அரசிடம் இந்திய ராணுவம் ஒப்படைக்க முயன்றதே என்பதாகும். ஆனால் அதற்கு பின்னர் நீங்கள் சிறிலங்கா அரசின் "கெலிகெப்டர்களில்" பவனி வந்ததையும், அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்றோரை கொலை செய்ய உங்கள் கொலையாளிகளை அதே அரசின் "கெலிகெப்டர்களில்" அனுப்பியதையும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஏனெனனில் உங்களின் இந்த கடைகெட்ட தந்திரோபாயத்தால் உயிர், சொத்து, மானபங்கம், அங்கவீனம் அடைந்தவர்கள் பலர்.

உங்களுடைய ராஜதந்திரத்தை பற்றிக் கூறுவதனால் பலவற்றை அம்பலத்திற்கு கொண்டுவரலாம். முதலில் பன்னிரண்டு இராணுவத்தை கைது செய்தபோது உங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த உங்களை மதித்து வந்தவர் விஜயகுமார துங்க. இலங்கை அரசு, விஜயகுமாரதுங்க இவர்களில் [redacted] யார் முற்போக்கு அணியைச் சார்ந்தவர்கள் என்ற வகையில் எடுத்துக் கொண்டாலும் அதற்கு முன்பே ஈழப் போராளிகளுடன் இந்தியா [illegible]தே பேச்சுவார்த்தை நடாத்தியவர் என்ற வகையிலும், இதுவரை அரச யந்திரத்தில் அங்கம் வகிக்காதவர் என்பதனாலும் அவரை ஒரு சிறுவனால் கூட அடையாளம் காண முடியும். அவருடன் அந்த இராணவத்தை அனுப்பியிருந்தால் தென்னிலங்கையில் அவரை பலப் படுத்த முடிந்திருக்கும். அதைவிடுத்து நீங்கள் இலங்கை அரசுடன் இராணுவத் தளபதி கொத்தலாவையுடன் பேரம் பேசினீர்கள். இதற்காக பின்பு புலிகளின் அமைப்பினுள் ஏற்பட்ட முரண்பாட்டில் கிட்டு மாமாவையும், ரஹீமையும் வண்டன் அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் தளபதி கொத்தலாவை ஏற்பாடு செய்து தனது நன்றிக் கடனை செலுத்தியதையும் இவர்களைப் பம்பாய் விமான நிலையத்தில் பிடிக்கப் பட்ட செய்தி இந்தியப் பத்திரிகையில் வந்ததையும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

இதனையடுத்து இந்திய நலன்களை பலப் படுத்தும் வகையிலும் இந்திய ராணுவத்தை இலங்கைக்கு வரவழைக்கும் நோக்கிலும் இந்திய அரசின் ஆயுத உதவியுடன் இலங்கை அரசுடன் மோதல் நடாத்தியதுமல்லாமல் அவர்களுக்கு சாதகமான முறையில் மற்றைய விடுதலை அமைப்புக்களை அழிப்பதில் நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் அனைவரும் அறிவார்கள். உதாரணமாக சுன்னாகம் பகுதிகளில் முன்னைநாள் யாழ் மாவட்ட புலிகளின் பொறுப்பாளரான கிட்டு மாமா புலி அமைப்பைச் சேர்ந்தவர்களைக் கொண்டே வீடுகளில் வீடியோ, டெக் போன்றவற்றை களவாடி வைத்து விட்டு டெலோ அமைப்பைச் சேர்ந்தவர்கள் திருடினார்கள் என்கிற வதந்தியை உருவாக்கி டெலோவை அழித்ததையும் அவர்களிடம் இருந்து பெற்றதாக அவ்வீடியோ,டெக் போன்றவற்றை கைப்பற்றியதென மக்களை ஏமாற்றியதையும் மறக்க முடியுமா?. மற்றைய அமைப்புக்கள், சமூக சேவையாளர்கள் மீது உங்கள் கொலை வெறிகளை நடாத்தி விட்டு பின் அவற்றை மக்கள் இனங்கண்டு கொள்ளக் கூடாதென்பதற்காக எவ்வித மூலோபாயமும் இல்லாத முறையில் இராணுவத்தின் மேல் தாக்குதல்களை நடாத்தி அவ்வீர சாகசங்கள் மூலம் உங்கள் அராஜகங்களை மக்கள் மத்தியில் நியாயப் படுத்தியதையும் எப்படி மறக்க முடியும்?

எமது முதலெதிரியாக மக்களை அழிவுக்கு ஆளாக்கிய நீங்களே இன்று யுத்தம் நடத்தும் இலங்கை அரசின் இராணுவத்தினரின் முகாமை ஆறு மாதங்களுக்கு முன் தமிழ்த் தேசிய ராணுவத்தினர்(TNA) அம்பாறைப் பகுதிகளில் தாக்கியழித்தபோது எமது சகோதர சிறிலங்கா ராணுவத்தினரை தமிழ்த் தேசிய ராணுவத்தினர் படுகொலை செய்து விட்டார்கள் என ஹர்த்தாலுக்கு அறைகூவல் விடுத்து ஹர்த்தாலையும் நடாத்தி முடித்தீர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டம் என்பதே எதிரியின் பலவீனமான நிலையை பயன்படுத்தி எதிரியை இன்னும் பலவீனப்படுத்துவது என்கின்ற மிகச் சாதாரண யுத்த தந்திரத்தைக் கூட புரிய முடியாமல் இலங்கை அரசானது சென்ற வருடம் சிங்கள இளைஞர்கள் மேலும், சாதாரண அப்பாவி மக்கள் மேலும் கொலை வெறித்தனமான தாக்குதல்களை மேற்கொண்ட போது மௌனம் சாதித்ததுமல்லாமல் இலங்கை அரசுடன் அவர்களை நம்புகிறோம் எனக் கூறிக் கொண்டு கை கோர்த்து தேனிலவு நடத்தினீர்கள். அன்று அவர்களுக்கு, நாளை எங்களுக்கு என்கின்ற சாதாரண உண்மையைக் கூட புரியாததுதான் உங்களுடைய சாணக்யமா? அல்லது யார் எப்படி ஆனாலென்ன? எமக்கு அதிகாரம் கிடைத்தால் சரியென்பதுதான் உங்களின் சமதர்ம போராட்டமா?

இந்திய ராணுவத்துடன் மோதும் போது இலங்கை ராணுவத்தினரும் அரசும் உங்கள் நண்பர்கள். இன்று இலங்கை ராணுவத்துடன் மோதும் போது இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை. நாளை அவர்கள் உங்கள் நண்பர்கள். ஏனெனில் உங்களுக்குத் தேவையான ஆயுதத்திற்கும் தோட்டாக்களுக்கும் எவராவது ஒரு நண்பர்கள் தேவை. இப்படி உங்கள் ஆயுதத் தேவைகளுக்காக எதிரிகளையும் நண்பர்களையும் உருவாக்குவீர்கள். எமது மக்களுக்காகவே போராடுகிறோம் என்று சொல்லுகின்ற நீங்கள் இவ்விரு பகுதியினரும்தமது நலன்களுக்காக எமது மக்களை அழிப்பவர்கள் என்கின்ற சாதாரண உண்மையைக் கூட புரிந்து கொள்ளவில்லை. இதுதான் உங்கள் ராஜதந்திரமா? அல்லது சாணக்யமா அல்லது மக்களுக்கு நீங்கள் செய்யும் வரலாற்றுத் துரோகமா?.
இதற்கு உங்கள் துப்பாக்கித் துரைத் தனங்கள் தோல்வியடையும் போது மக்களே பதில் சொல்லுவார்கள்

"அனைத்து அதிகாரங்களும் உழைக்கும் மக்களுக்கே".

# அராஜக எதிர்ப்பாளர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்